செ.வெ.எண்: 1004 நாள்: 14/11/10

மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (கணக்கு மற்றும் பணிவரவு),
சென்னை – 18.

செய்தி வெளியீடு

# இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை துறையின் 150ம் ஆண்டு விழா கொண்டாட்டம்

இந்திய தணிக்கை தலைவரின் அலுவலகம் முதன் முதலாக 1860ம் ஆண்டு, அரசாங்கத்தின் தணிக்கை மற்றும் கணக்கு பணிகள் ஒன்றினைக்கபட்ட தருணத்தில் உருவானது. 1919 மற்றும் 1935ம் ஆண்டுகளில் வெளியான இந்திய அரசு சட்டங்கள் இவ்வலுவலகத்தின் நிலையினை உயர்த்தியது. 1950ம் ஆண்டு இந்தியா குடியரசு நாடானவுடன், இந்திய தணிக்கை தலைவரின் நிலை, இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் பதிக்கப்பட்டு, "இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை தலைவர்" என்று மறுபெயரிடப்பட்டது.

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை தலைவரின் அலுவலகம் நவம்பர் 16, 2010 அன்று அதன் 150வது ஆண்டினை நிறைவு செய்கின்றது. வரலாற்று சிறப்புமிக்க இந்த நிகழ்வை கொண்டாடும் விதமாக நாடெங்கும் உள்ள அனைத்து இந்திய கணக்கு மற்றும் தணிக்கை துறை அலுவலகங்களில் ஒரு ஆண்டு காலத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன.

இந்த கொண்டாட்டத்தின் தொடக்க விழா நவம்பர் 16, 2010 (செவ்வாய் கிழமை) காலை 11.00 மணியளவில், சென்னை தேனாம்பேட்டை எண் 361, அண்ணா சாலையில் அமைந்துள்ள மாநில முதன்மை கணக்காயர் (கணக்கு மற்றும் பணிவரவு) அலுவலக திறந்தவெளி அரங்கில் நடைபெற உள்ளது. இவ்விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் வருகை தர அன்புடன் இசைந்துள்ளார்கள். அரசு மற்றும் அரசு நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் விழாவில் பங்கேற்கின்றனர்.

1/1

(செ. சரவண மூர்த்தி)
துணை மாநில கணக்காயர் (நிர்வாகம்)

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9